# திருப்பூர் மாவட்டம்
# முத்தூர் பேரூராட்சி

<u>ந.க.எண். 109/2010</u> <u>நாள் : 20.07.2010</u>

## <u>ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு</u>

திருப்பூர் மாவட்டம், முத்தூர் பேரூராட்சியில் கீழ்க்கண்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முத்தூர் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் **06.08.2010**-ம் தேதி **வெள்ளிக்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **06.08.2010**-ம் தேதி **வெள்ளிக்கிழமையன்று** பிற்பகல் 3.30 மணிக்கு பேரூராட்சியில் செயல் அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **05.08.2010**ம் தேதி **வியாழக் கிழமை** மாலை 5.00 மணிக்குள் பட்டியலில் கண்டுள்ள தொகை மற்றும் விற்பனை வரியையும் சேர்த்து இப்பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி படிவத் தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. டெண்டர் டெபாசிட் தொகை ரொக்கமாக செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள், செலுத்த வேண்டிய டேவணித்தொகை, சால்வன்சித் தொகை, வங்கி உத்திரவாதச்சான்று மற்றும் இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் வேலை நேரத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் 1998ஆம் ஆண்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் அரசால் அவ்வப்போது வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மற்றும் அறிவுரைகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படும்.

மேலும் **http://www.tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரியிலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை பதிவிறக்கம் செய்து அனுப்பலாம்.

## <u>ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.
2. ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப் படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்படமாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.
4. ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர், முத்தூர் பேரூராட்சி என்ற முகவரியிட்டு கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.
5. பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக்கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு.
6. ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விலக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.
7. வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8. ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 50/- மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித்தர வேண்டும்.

9. வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக் காரர்களே பொறுப்பாவார்கள்.

10. ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித முன்னறிவிப்புமின்றி பறிமுதல் செய்யப்படும்.

11. குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே பொறுப்பு ஏற்க வேண்டும்.

12. வேலையை நல்ல முறையில் செய்து வேலையை முழு அளவில் முடித்த பின்னர்தான் முழுத் தொகையும் பட்டுவாடா செய்ய இயலும்.

13. ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் மற்றும் தார் (**80/100** மற்றும் **Emulsion**) வாங்கிக் கொள்ள வேண்டும். இதன்பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் தரச்சான்று, வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14. வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால், ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக் கொள்ளப்படும் வகையில் தரம்வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப் பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

15. யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

16. வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) கூடுதல் காப்புத் தொகை | : | 5 % |
| ஆ) வருமானவரி | : | 2 % |
| இ) வருமான வரி மேல்வரி | : | 10 % |
| ஈ) விற்பனை வரி | : | 4 % |
| உ) விற்பனை வரி மேல்வரி | : | 5 % |
| ஊ) கல்வி வரி வருமானவரி தொகையில் | : | 5 % |
| எ) கட்டுமான தொழிலாளர் சந்தா | | 0.3 % |

17. தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத்தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

18. பணிகள் மேற்கொள்ளவிருக்கும் இடத்தினை பணி ஆரம்பிக்கும் முன்னரும், பணி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதும், பணி முடிந்த பின்னரும் ஆகிய மூன்று நிலைகளிலும் ஒரே இடத்தை சுட்டிக்காட்டும் படியாக புகைப்படம் எடுக்கப்பட வேண்டும்.

19. வேலை நடைபெறும் இடத்தில் பணிகள் குறித்த அடங்கிய விளம்பரப்பலகை நிறுவப்படுதல் வேண்டும்.

20. இப்பணிகள் தொடர்பாக மத்திய மாநில அரசுகள் பிறப்பிக்கும் அனைத்து உத்திரவுகளுக்கும் கட்டுப்பட்டு பணிகள் முடிக்க வேண்டும்.

21. **E-Tender** மூலம் ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பதிவிறக்கம் செய்து தரப்படும் ஒப்பந்தப்புள்ளிக்கும் மேற்காணும் அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

22. மதிப்பீட்டுத் தொகையில் 5 சதவீதத் தொகைக்கு வங்கி உத்திரவாதச் சான்று இணைக்க வேண்டும் அல்லது கூடுதல் காப்புத் தொகையினை ரொக்கமாக இவ்வலுவலகத்தில் செலுத்திய பிறகு வேலையை ஆரம்பிக்க வேண்டும்.

23. வேலைகள் சம்பந்தமாக அவ்வப்போது அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

24. ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

25. ஒப்பந்ததாரர் தனக்கு அளிக்கப்பட்ட பணியினை வேறு யாருக்கும் மறு ஒப்பந்தம் செய்யக்கூடாது.

26. பணிகளுக்கு ரோலர், கலவை இயந்திரம் மற்றும் பேருந்து நிலைய கான்கிரீட் தளம் அமைத்ததற்குண்டான (சர்பேஸ் வைப்ரேட்டர்) சொந்த ஏற்பாட்டின் பேரில் பயன்படுத்தி உரிய காலத்திற்குள் வேலைகளை முடிக்க வேண்டும்.

27. எற்கனவே இதுபோன்ற பேருந்து நிலைய பணிகள் மேற்கொண்டதற்கான முன் அனுபவ சான்று இணைக்கப்பட வேண்டும். அதற்குண்டான லெவலிங் இன்ஸ்ட்ருமென்ட் மற்றும் இதர உபகரணங்கள் ஒப்பந்ததாரர்கள் தன் சொந்த பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

28. ஒப்பந்தக்காரர் டேவணித் தொகை டேவணித் தொகை செலுத்திய ரசீது, முன் அனுபவச் சான்றிதழ், ஒப்பந்தக்காரர் வகுப்புத் தகுதிச் சான்றிதழ், (தகுதி குறைந்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்கத் தகுதியற்றவர் ஆவர்). நிதி நிலை அறிக்கை, விற்பனை வரிச் சான்றிதழ், பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப் படிவத்துடன் வைத்து கொடுக்க வேண்டும்.

29. ஒப்பந்தக்காரர் கடந்த 5 ஆண்டுகளில் ஏதாவது 3 ஆண்டுகளில் மேற்கண்ட வேலையின் மதிப்பீட்டுத் தொகை போல மொத்தப் பணிகள் இரண்டரை மடங்குக்கு குறையாமலும், குறைந்தபட்சம் மேற்காணும் வேலையில் கண்டுள்ள பணி போன்று ஒன்றினை இப்பணி மதிப்பீட்டுத் தொகை அளவிற்கு செய்து முடித்திருக்க வேண்டும். அதற்கான சான்றொப்பம் பெற்று சான்றிதழ்களின் நகல்கள் இணைக்கப்பட வேண்டும். இதுபோன்ற முன் அனுபவ சான்றிதழ் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டுள்ள சான்றுகள் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

இதர விபரங்களை அலுவலகத்தில் அலுவலக வேலை நாட்களில் நேரில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

## <u>பட்டியல்</u>

**<u>பகுதி II திட்டம் 2010-2011</u>**

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. (லட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி விலை (விற்பனை வரிகள் உட்பட) ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் | ஒப்பந்தக் காரரின் தகுதி (புதிய வகுப்பில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1) | முத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தின் உட்புறத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 30.00 | 60000/- | 10620/- | 150 நாட்கள் | சிறப்பு நிபந்தனை யில் குறிப்பிட்டு உள்ளவாறு |

20/3/10

செயல் அலுவலர்
முத்தூர் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம்.

<u>பெறுநர்:</u>

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், முத்தூர் பேரூராட்சி.

<u>நகல்:</u>

1. மாண்புமிகு. நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகம், வெள்ளகோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் இயக்குநர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம் சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பூர் மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
4. செயற்பொறியாளர், பேரூராட்சிகள் இயக்ககம், குறளகம், சென்னை அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது
5. பேரூராட்சிகள் உதவி இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

6. உதவி செயற் பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு.

7. தொகுதி உதவிப் பொறியாளர் அவர்கள், காங்கயம் பேரூராட்சி,

8. செயல் அலுவலர்கள், பேரூராட்சி, கன்னிவாடி, கொளத்துப்பாளையம், மூலனூர், சின்னக்காம்பாளையம், ருத்ராவதி, காங்கயம், கணியூர், மடத்துக்குளம், கொடுமுடி, சிவகிரி, கொல்லன்கோவில், சென்னசமுத்திரம் மற்றும் குமரலிங்கம் அலுவலக விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய.

9. செயல் அலுவலர், வெள்ளகோவில் நகராட்சி, அலுவலக விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய.

10. ஆணையாளர் அவர்கள், ஊராட்சி ஒன்றியம், மூலனூர், தாராபுரம், வெள்ளகோவில், காங்கயம், கொடுமுடி அலுவலக விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய.

11. அலுவலக விளம்பரப் பலகைக்கு.

12. கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், முத்தூ, சின்னமுத்தூர் மற்றும் ஊடையம்.

13. கிளை அஞ்சல் அலுவலர், அஞ்சல் அலுவலகம், முத்தூர்.

14. தலைவர் அவர்கள் மேஜைக்கு.

15. நகல் 109/2010 கோப்புக்கு.